REGD. No. M. 6311 ✶ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: மாசி 24உ செவ்வாய் (8—3—55) ★ ★ வெளியீடு: மாசி 25உ புதன் (9—3—55) [இதழ் 227

துறைமுகத் தொழிலாளர் வேலைநிறுத்தம்

8,000 பேர் ஈடுபட்டுள்ளனர்

மொம்பாசா (கினியா) மார்ச் 7—

இங்கு சுமார் 10 ஆயிரம் துறைமுகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதினால் துறைமுகம் வேலையற்றுக் கிடக்கிறது என்று கூறப்படுகிறது.

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் ஐரோப்பிய 'கிளப்'புகள் மீது கற்களை வீசியும், பஸ்களை நிறுத்தி பிரயாணிகளை இறக்கிவிட்டதாயும் செய்திகள் கூறுகின்றன.

நகரில் அதிகமான போலீசார் பாதுகாப்புச் செய்து வருகின்றனராம். இரண்டு பிரிவு இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டிருக்கிறார்களாம்.

'தொழில்களைப் பரவலாகத் துவங்க வேண்டும்'

'தொழிலாளர் இலகுவில் இடம் பெயரமாட்டார்கள்'

'மக்களுக்கு பயன்படும் பொருட்களை உற்பத்தி செய்யவும் அரசாங்கம் முன்வர வேண்டும்'

இந்தியப் பேரரசிற்கு ஆற்காடு இராமசாமி எச்சரிக்கை

"வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது குறித்தும், வேலையின்மைப் பிரச்சினையைப் போக்குவது பற்றியும் அனைவரும் பேசி வருகின்றனர். இந்தியா போன்ற ஒரு நாட்டில் அடிக்கடி இடம் பெயரக் கூடியவர்களாகத் தொழிலாளர்கள் இருக்கமுடியாது. நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும், வட்டார நோக்கிலிருந்து பிரச்சினைகளை அணுகும் போக்கு வேறு இருந்து வருகிறது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நெசவாலைகள் அல்லது வேறு தொழில்களை நிறுவுவதின் மூலம்தான் பிரச்சினையை ஒழுங்காக்க முடியும்."

"இத்துறையில், தனி நபர் முயற்சி முன்வரவில்லையானால், 'ஒழுங்கீனமான போட்டா போட்டி'க்கு இடமில்லாத பட்சத்தில், மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கங்களும் ஏன் இத்துறையில் தொழில்களைத் துவங்காமல் இருக்க வேண்டும்? இதற்குரிய தகுதியாக இருப்பது திறமை ஒன்றே ஒன்றுதான்."

"குறிப்பிட்ட சில இனங்களில் தனி நபர்களைக் காட்டிலும் அரசாங்கத்தால் திறம்பட செயலாற்ற முடியுமானால், அவ்வினங்களில் அரசாங்கம் கண்டிப்பாகத் தலையிட்டாக வேண்டும். இது போன்றே, தனி நபர் நிர்வாகத்தினால் சில இனங்களில் செலவு சிக்கனமாகும் எனக் கண்டறியப் பட்டால், அரசாங்க நிர்வாகத்தில் இருந்து வந்த தொழில்களும் தனி நபர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்."

—என்று, டாக்டர் ஏ இராமசாமி அவர்கள், டெல்லி மேல் சபையில், வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது குறிப்பிட்டிருக்கிறார்.

தொடர்ந்து அவர் கூறினார்:—

"எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் என்பன போன்ற அரசியல் சட்டத்தின் நோக்கங்களின் அடிப்படையைக் கொண்டுதான் இந்த வரவு-செலவுத் திட்டத்தைத் திர்மானிக்க வேண்டும்; பெரும் ஏற்றத் தாழ்வுகள் இருக்கக் கூடாது; மலைகள் தாழ்த்தப் படவும், மடுவுகள் உயர்த்தப் படவும் வேண்டும்."

"பொது, தனி, கலப்புப் பொருளியல் போன்றவை குறித்து சமீப காலத்தில் எழுந்துள்ள முரண்பாடுகள் எனக்கு விளங்கவில்லை. சர்க்கார் தொழில்களை ஆரம்பிப்பது என்ற முறையில், இந்தியாவில் மட்டுமாகிலும், மக்கள் எப்போதும் கலப்புப் பொருளாதாரத்திற்கு ஆதரவு தருபவர்களாகவே இருந்து வந்திருக்கிறார்கள்.

"இரயில்வேக்கள், தபால்-தந்தி, மின்சாரத் திட்டங்கள் ஆகியவை எல்லாம், 'முன் காலத்திலேயே தொழில்களில் சர்க்கார் தலையீட்டு இருந்தது' என்பதை நிரூபிக்கும் சான்றுகளாகும்.

"இந்தியாவில் ஆரம்பிக்கப்படும் தொழில்கள் தங்களுடன் போட்டியிட, அன்றைய அரசாங்கங்கள் சந்தேகமற தங்களின் சொந்த நலன் கருதியே விரும்பாமலிருந்தன; ஆனால், நிச்சயமாக, உணர்வு பூர்வமான மக்களின் கருத்து, கலப்புப் பொருளாதாரத்திற்கு ஆதரவாகவே இருந்துவந்திருக்கிறது

"எனவேதான், இப்போது சர்க்கார் நிறுவனம், தனிப்பட்டவர் தொழில் என்ற பிரச்சினைகள் குறித்து எழுந்துள்ள வாக்குவாதங்களும், இதனால் சில தனிப்பட்ட தொழிலதிபர்களின் உள்ளத்தில் தோன்றியுள்ள குழப்பமும் ஏன் என்பது எனக்கு விளங்கவில்லை.

"எந்த ஒரு தனிப்பட்டவரும், சர்க்கார் உதவியின்றி ஒரு பெரும் எஃகுத் தொழிற்சாலையையோ, மின்சாரத்திட்டத்தையோ துவக்கி நடத்திவிட முடியுமா? எனவே, தனியார் தொழில், சர்க்கார் தொழில் என்று பாகுபாடு இருக்க வேண்டிய அவசியம் உண்மையிலேயே இல்லை.

"சர்க்கார் தொழில் ஆரம்பிப்பது குறித்து, தனிப்பட்டவர்கள் பயப்படுவதற்கு உண்மையான காரணமெல்லாம், தனியார் தொழில்களில் உள்ள போட்டி நிலைகள், சர்க்காரின் தொழில்களுக்கு இருக்காதோ என்ற அவர்களின் அச்சம்தான்; அப்படியானால் அது ஆராய்ந்து பரிகாரம் காணப்பட வேண்டிய ஒரு பிரச்சினையாகும்; அதற்காகவே, சர்க்கார், 'தொழில்களையே ஆரம்பிக்கக்கூடாது,' எனக் கண்டிப்பது கூடாது.

"மத்தியதர வர்க்கத்தினர் மிகவும் அவதியுறுகிறார்கள்; அவர்கள் பிரச்சினைகளை சர்க்கார் கவனிக்க வேண்டும்; அவற்றைக் கவனிக்க, சர்க்கார் ஒரு தனி இலாகாவையே நிறுவ வேண்டும்."

சென்னை மாநிலத்தில் அணுசக்தி மூலப்பொருள்

மக்கள் சபையில் தகவல்

புதுடில்லி, மார்ச் 7—

சென்னை, மற்றும் ராஜஸ்தான், பீகார் ஆகிய மாநிலங்களில் அணுசக்தி மூலப் பொருளான யுரேனியம் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக டெல்லி மேல் சபையில் உதவி வெளிநாட்டிலாகா மந்திரி அனில் கே. சந்தா குறிப்பிட்டிருக்கிறார்.

ஆந்திராவில் மந்திரி சபை அமைப்பு

புதுடில்லி, மார்ச் 7—

ஆந்திராவில் காங்கிரஸ் முன்னணி பெரும் வெற்றி பெற்றிருப்பதின் தொடர்ச்சியாக, காங்கிரஸ் மந்திரி சபை அமைப்பது குறித்து பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்காக காங்கிரஸ் தலைவர் யூ என். தேபர், மற்றும் லால்பகதூர் சாஸ்திரி முதலியோரும் விஜயவாடாவுக்கு வரவிருக்கின்றனர் என்று தெரிகிறது.

கே. பி. மாதவன் நாயர், மற்றும் காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர்களும் வரும் 10-ந் தேதியன்று விஜயவாடாவில் கூடுவர் என்றும் தெரியவருகிறது.

மக்கள் முன்னேற்றக் கட்சியில் கோஷ்டி சண்டை வலுக்கிறது

கயானாவுக்கு நல்லதா?

ஜியார்ஜ்டவுன், மார்ச் 7—

பிரிட்டிஷ் கயானா மக்கள் முன்னேற்றக் கட்சி இருகூறாக பிளவுபட்டு இயங்கி வருவது அறிவிக்கப்பட்ட ஒன்றேயாகும்.

டாக்டர் செட்டி ஜெகன் தலைமையில் ஒன்றும், பர்ன்ஹாம் தலைமையில் ஒன்றுமாக இயங்கும் அந்த இருகூறுகளும், கட்சியின் வருடாந்திர காங்கிரசை மார்ச் 26, 27-ந் தேதிகளில் நடத்துவதென முடிவு செய்துள்ளனவாம்.

தான் தான், இன்னும் சட்டப்படி செயலாளர் என்று கூறும் திருமதி ஜெகன், இங்கிருந்து 60 மைல் தொலைவில் உள்ள ஆம்ஸ்டர்டாம் நகரில் மாநாடு நடைபெறும் என்று கூறுகிறார்.

கடந்த மாதம் நடைபெற்ற கட்சித் தேர்தலில் செயலாளராகத் 'தேர்ந்தெடுக்கப்பட்ட' ஜெய் நாராயண சிங் என்பவர், ஜியார்ஜ்டவுனிலேயே மாநாடு நடைபெறும் என்று அறிவித்துள்ளாராம்.

இந்த இரண்டு கோஷ்டியினரும், பிரிட்டிஷ் கயானாவின் கவர்னரை அணுகி மாநாடு நடத்த அனுமதி கோரியுள்ளனராம்.

புதுவையில் தி. மு. கிளைக் கழகத் திறப்பு விழாக்கள்-பொதுக்கூட்டம்

6—3—55 ஞாயிறு காலை 8 மணிக்குத் தேங்காய்த் திட்டிலும், 9 மணிக்கு உழவர்கரையிலும், 10 மணிக்கு ஒலையான் பேட்டை, முதலியார் பேட்டை ஆகிய இரண்டு ஊர்களிலும், புதுவை தி. மு. கழகக் கிளைகளின் திறப்பு விழாக்கள் சிறப்பாக நடைபெற்றன.

திறப்பு விழாக்களில், தோழர்கள் ஏ கோவிந்தசாமி, எம். எல். ஏ. அவர்களும், சி. பி. சிற்றரசு அவர்களும் கலந்துகொண்டு, கொடியேற்று விழாவும் திறப்பு விழாவும் ஆற்றினர்.

பொதுக் கூட்டம்

அன்று மாலை 6-30 மணிக்கு புதுவை ஒதியஞ்சாலைத் திடலில் தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற ஓர் மாபெரும் பொதுக் கூட்டத்திற்குச் சுமார் 5000-க்கு அதிகமாக ஆண்களும் - பெண்களும் வந்திருந்தனர்.

தோழர் ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ. அவர்கள், 'நமது கடமை' என்பது பற்றியும், தோழர் சி. பி சிற்றரசு அவர்கள் 'திராவிடம் ஏன் பிரிய வேண்டும்?' என்பது பற்றியும் சிறந்த சொற்பொழிவாற்றினர்; கூட்டம் இரவு 10-15 மணிக்கு இனிது முடிவுற்றது. (க. கி.)

வாக்குரிமையைப் பறிக்க யோசனை!

மதுவிலக்கு வெற்றி பெற கூறப்படும் கருத்து

புதுடில்லி, மார்ச் 7—

இந்தியப் பேரரசின் திட்டக் குழு நியமித்துள்ள மதுவிலக்கு விசாரணைக் குழுவின் முன் இந்திய சர்க்கார் தொழிலாளர் இலாகா உதவி மந்திரி அபீத்அலி சாட்சியம் கூறுகையில், ஒரு முறைக்கு மேல் மதுவிலக்குக் குற்றம் புரிபவர்களின் பிரஜா உரிமைகள் அனைத்தையும் பறிமுதல் செய்ய வேண்டும் என்றும், மதுவிலக்குச் சட்டத்தை மீறுவது அரசியல் சட்டத்திற்கு விரோதமான குற்றம் என அறிவிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் கருத்தறிவித்ததாவது:—

"இரண்டாம் முறை மதுவிலக்குக் குற்றம் புரிவோரின் ஓட்டுரிமையை ரத்து செய்ய வேண்டும்; அவர்களை சர்க்கார் வேலைகளுக்கோ, சர்க்கார் தொடர்புள்ள வேலைகளுக்கோ இலாயக்கற்றவர்களாகச் செய்ய வேண்டும்;' அவர்களுக்கு கடுமையான சிறைத் தண்டனை விதிக்கும் அளவில் தற்போதைய சட்டங்கள் திருத்தப்படவேண்டும்.

"மதுவிலக்கை படிப்படியாக அமுலாக்காமல், ஒரே நேரத்தில் எல்லா மாநிலங்களிலும் அமுல் செய்யவேண்டும்.

"மதுவிலக்கு வெற்றி பெறுவதற்காக, சமூக ஊழியர்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்காக உத்தியோக பூர்வமான நிறுவனம் ஒன்றை அமைப்பது அவசியம்."

ரூ. 296 லட்சம் துண்டுவிழும்!

ஆந்திர வரவு—செலவுத் திட்டம்: மக்கள் சபையில் தாக்கல்

புதுடில்லி, மார்ச் 7—

ஆந்திராவில் குடியரசுத் தலைவரின் ஆட்சி நடைபெறுவதையொட்டி, அந்த மாநிலத்தின் 1955—56-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை நிதி மந்திரி தேஷ்முக் மக்கள் சபையில் தாக்கல் செய்திருக்கிறார்.

இதன்படி ஆண்டு வருமானம் 2191 35 லட்சம் என்றும், செலவு ரூ. 2488·23 லட்சம் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

புது வரிகள் எதுவும் விதிக்கப்படவில்லை என்றும் தெரிகிறது.

சென்ற ஆண்டு வரி விதிப்பு செலவு விகிதங்களைக் கொண்டே, இந்தத் திட்டத்தை தயாரித்திருப்பதாயும், தேர்தல் முடிவுகள் அனேகமாகத் தெரிந்துவிட்ட போதிலும் மார்ச் 15-ந் தேதிக்குப் பிறகுதான் சட்டபூர்வமாக எல்லாம் அறிவிக்கப்படக் கூடுமென்றும், அதற்குப் பிறகு சட்ட சபையைக் கூட்டி மார்ச் 31-ந் தேதிக்குள் அங்கீகாரம் பெறுவதற்குப் போதுமான காலம் இல்லாமையால்தான், ஆந்திர வரவு-செலவுத் திட்டத்தை, தான் மக்கள் சபையில் தாக்கல் செய்வதாகவும் மந்திரி தேஷ்முக் குறிப்பிட்டிருக்கிறார்.

ஏட்டிக்குப் போட்டி!

சிரியா-எகிப்து கூட்டு ஒப்பந்தம்

எகிப்து, சிரியா ஆகிய நாடுகள், அரேபிய நாடுகளின் இராணுவ அரசியல், பொருளாதார நிலையைப் பலப்படுத்துவதற்காக புது நிறுவனம் ஒன்றை அமைக்க ஒப்புக் கொண்டு விட்டதாக அறிவித்துள்ளன.

டமாஸ்கசில் நிரந்தரமான கூட்டு இராணுவ தளமொன்றை அமைத்து, இராணுவக் கொள்கைகளில் ஒத்துழைப்பது, துருக்கி—ஈராக் ஒப்பந்தத்தினின்றும் பாதுகாப்புப் பெறுவது, அரேபிய நாணயங்களை வழங்கும் பாங்கு என்று நிறுவுவது உட்பட ஒரு பொருளாதாரக் கொள்கையை வகுப்பது—ஆகியவற்றிற்கு இந்த சிரியா—எகிப்து ஒப்பந்தம் வழி வகை காணுமாம்.

1954 செப்டம்பர் மாத இறுதி வரை சமுதாய அபிவிருத்தித் திட்டம், தேசீய விஸ்தரிப்பு சேவைகள் ஆகியவற்றின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட சாதாரண பாதைகள், கெட்டிப்படுத்தப்பட்ட பாதைகள் ஆகியவற்றின் மொத்த நீளம் 18,000 மைல்களாகும்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணதுரை

சென்னை . 8—3—1955 செவ்வாய்

‘தன்னுயுதமும்....!’

‘தன் கைப் பொருளும் பிறர் கை கொடுக்கும் பேதையும் பதரே’ என்பது, மிக மிகச் சாதாரணமாக வழங்கி வரும் ஒரு மூதுரையாகும்.

பதர், உருவத்திலும் தோற்றத்திலும் முற்றிக் காய்ந்த நெல் மணியைப்போலத்தான் இருக்கும். இருப்பினும், நெல் பயன் தருவதுபோல் பதர் பயனளிப்பது கிடையாது. கான்பவருக்குத் திகைப்பைத் தருவதுடன் பதரின் பயன் முடிவடைந்துவிடுகிறது.

பயனற்ற பதருக்குக்கூட பயன் உண்டெனக் கூறினர் குமரேச சதகத்தார். அவர் கூறிய பயனும் அற்றதாக இருக்கிறது சென்னை அரசாங்கம்!

பதரினும் தான் பயனற்றவன் எனக் குறிப்பிடுவதின் மூலம், தன்னை ஒன்றுக்கும் உதவாதவன் எனக் கற்பனை செய்து, தன்னையேதான் நிந்தித்துக்கொண்டிருக்கிருர் குமரேச சதகத்தார். அவரைப் போன்றே, தங்களைத் தாங்களே நிந்தித்துக்கொள்ளக் கூடியவர்களாகவும், பிறரால் நிந்தித்து ஒதுக்கத்தக்கவர்களாகவும் தங்கள் செயலால் தங்களை ஆக்கிக்கொண்டுள்ளனர் சென்னை அமைச்சர்கள்!

நெய்வேலியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரி, இந்தியத் துணைக் கண்டத்தில் வேறு எங்கும் கிடைக்கப்பெறுவது கிடையாது.

விரல் விட்டு எண்ணக்கூடிய இடங்களிலேயே பழுப்பு நிலக்கரி உலகில் கிடைக்கப்பெறுகின்றது.

பழுப்பு நிலக்கரி, மற்ற நிலக்கரிபோல் எரி பொருளை மிகுதியாகக்கொண்டிருப்பதில்லை. ஆனல், மற்ற நிலக்கரியில் அறவே கிடைக்காத அல்லது குறைவாகக் கிடைக்கிற இன்றியமையாத் தேவையாக உள்ள மற்றத் துணைப் பொருட்கள் ஏராளமாக உண்டு பழுப்பு நிலக்கரியில். நெய்வேலி பழுப்பு நிலக்கரிக்கிருக்கும் தனித்தன்மை—சிறப்பு இதுதான்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரியைக் குறித்துச் சென்ற இரண்டு ஆண்டுகளாக சென்னை அரசாங்கம் பரீட்சை செய்துவந்தது. இப்பரீட்சைக்காக முதலாண்டு ரூ. 30 இலட்சத்திலிருந்து 35 இலட்சம் வரையில் செலவிட்டது. இரண்டாம் ஆண்டில் செலவிட்ட தொகையும் சேர்த்து, இது வரை சென்னை அரசாங்கம், இப்பரீட்சார்த்தத் துறைக்கு ஏறத்தாழ ரூ. 80 இலட்சம் வரை செலவளித்துள்ளது.

இரண்டு ஆண்டு ஆராய்ச்சியின் விளைவாக, ஆராய்ச்சியில் ஈடுபட்டுவந்த பிரிட்டிஷ் நிபுணர்களின் முடிந்த அறிக்கையும் வெளியாகிவிட்டது. நெய்வேலி பழுப்பு நிலக்கரியிலிருந்து, அதைச் செய்யலாம், இதைச் செய்து முடிக்கலாம் என்ற கட்டத்தைக் கடந்து, இன்னின்ன பொருட்களைத் தான் வியாபாரத் துறையில் திட்டவட்டமாக உற்பத்தி செய்ய முடியும் என்ற ஒரு உறுதிப்பாடு, பிரிட்டிஷ் நிபுணர்களின் அறிக்கையால் விளக்கமாகத் தெரிந்துவிட்டது.

பெரும் அளவில் மின்சார உற்பத்தி செய்வது இயலும்.

தென்னாட்டிற்குத் தேவைப்படும் அளவு செயற்கை உரத்தை உற்பத்தி செய்யக்கூடிய உரத் தொழிற்சாலை ஒன்று நிறுவ முடியும்.

சிக்கனமான செலவில் செய்கல் அளவுள்ள எரி பொருட்களை உருவாக்க முடியும்.

மரப் பொருட்களுக்குப் பூசும் பெயின்டுகள், வார்னிஷ், இன்னும் இதுபோன்ற பொருட்களை உற்பத்தி செய்ய முடியும்.

மோட்டாருக்கு வேண்டிய உயர்ந்த ரக எரி எண்ணெயைக் கூட உண்டாக்க முடியும்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி, கேட்கவேண்டிய முறையில் கேட்டால் தென்னாட்டினருக்கு-திராவிடருக்குக் கொடுப்பதற்கெனவே, தனது கருவுக்குள் மறைத்து வைத்துக் கொண்டிருக்கின்ற அரும் பெரும் செல்வத்தின் பட்டியல் தான் மேலே கொடுக்கப்பட்டு இருப்பது. அக்கருவிலே இருக்கும் மேற்படி செல்வத்தைக் கண்டறிந்து கூறினர் பிரிட்டிஷ் நிபுணர்கள்.

இவ்வுண்மையை, ஆரிய வேதங்கள் கூறவில்லை; ரிக் வேத மந்திரங்கள் கூறவில்லை; தேவகணங்கள் செப்பவில்லை; சிவ கணங்கள் சாற்றவில்லை; சிவபெருமான் நந்திக்குச் சொல்ல நந்தி நமக்குச் சொல்லவும் இல்லை; அஸ்வனி தேவர்கள் கூறவில்லை; அஷ்டதிக்குப் பாலகர்கள் அறையவில்லை!

பிரிட்டிஷ் நிபுணர்கள் கூறினர்! அதுவும் ரூ. 80 இலட்சம் செலவிட்ட பிறகு, மேற்படி உண்மையை அப்பிரிட்டிஷ் நிபுணர்கள் விளக்கமாக உரைத்துள்ளனர்.

ரூ. 80 இலட்சத்தில் 8 தம்படியும் தாகை முன்வந்து செலவு செய்யாத இந்தியப் பேரரசு, பிரிட்டிஷ் நிபுணர்களின் விளக்கத்தைக் கண்டதும், வலிய ஓடிவந்து, ‘இதோ 60 கோடி—திட்டத்தைத் துவக்குகிறேன்—தொழிலைத் தொடங்குகிறேன்—நெய்வேலி பழுப்பு நிலக்கரியின் வயிற்றில் மறைந்திருக்கும் பெரும் செல்வத்தை வெளிக்குக் கொண்டு வருகிறேன்—விற்பனை செய்கிறேன்—வரும் இலாபத்தை எடுத்துக் கொள்ளுகிறேன்—நானே எடுத்துக்கொள்ளவில்லை—உங்களுக்கும் கொஞ்சம் இலாபத்தில் பங்கு தருகிறேன்—இலாபத்தில் 75 ரூபாய் எனக்கு; 25 ரூபாய் உனக்கு’ என உடன்பாடு செய்து கொண்டிருக்கிறது.

இதுகண்டு, இந்தியப் பேரரசின் தாராளத்தைப் பார்த்து, ‘கவலை தொலைந்தது - சங்கடம் தீர்ந்தது - பொறுப்பு ஒழிந்தது - ரூ. 60 கோடி முதல் தேட வேண்டிய தொல்லை என்னை விட்டு நீங்கியது - கிடைத்த வரையில் இலாபம் - கொடுத்த வரையில் ஆதாயம்—இலாபத்தில் எனக்கு ரூ. 25 பங்கு கிடைக்கிறது! அதுவே போதும்! அய்யனின் கருணையே கருணை!’ என இந்தியப் பேரரசின் சுரண்டல் புத்தியை — சூது மதியை — கடைந்தெடுத்த பண்டாரம்போலவே போற்றுகிறது - பாராட்டுகிறது - பாட்டிசைக்கிறது சென்னை அரசாங்கம், வெட்கம் மானம் துளியும் இன்றி!

விரம்-விவேகம் இரண்டும் இல்லை, இந்தச் சென்னை அரசாங்கத்திற்கு!

நில வரி—நீர் வரி—விற்பனை வரி—ஆக இந்த மூன்றையும் நம்பித்தான் சென்னை அரசாங்கம், அரசாங்கம் என்ற பெயரைத் தாங்கிக்கொண்டு இருக்கிறது.

சென்னை அரசாங்கத்திற்கு இருந்துவரும் வேறு வருமானத் துறைகளோ குறைவு—அவைகளில் கிடைக்கும் வருமானமோ இன்று மிகமிகக் குறைவு!

நடைமுறை ஆண்டுக்கு மின்சாரம் மூலம் ரூ. 207 இலட்சம் தான் கிடைக்கக்கூடும் என அரசாங்கம் எதிர்பார்த்தது. ஆனல் ரூ. 257 இலட்சம் கிடைத்திருக்கிறது!

நெய்வேலி பழுப்பு நிலக்கரியைக் கொண்டு, பிரிட்டிஷ் நிபுணர்கள் முடிவுப்படி மின்சார உற்பத்தியை சொந்தப் பொறுப்பில் சென்னை அரசாங்கம் மேற்கொள்ள முன்வந்திருந்தால், மின்சாரத்தின்மூலம் அதிக வருமானத்தை அடைய சென்னை அரசாங்கத்திற்குச் சாத்தியமாகும். இன்றுள்ள உயர்ந்த மின்சாரக் கட்டணத்தையும் கணிசமாகக் குறைப்பது நிறைவேறக்கூடும்.

மின்சாரப் பெருக்கம், தொழில் பெருக்கத்தின் அடிப்படை. தொழில் பெருக்கத்தின் விளைவு செல்வப் பெருக்கம். செல்வப் பெருக்கம், திராவிட மக்களின் வாழ்க்கைத் தர உயர்வின் வாயிற்படி.

செயற்கை உரத்தை பயன்படுத்தி விவசாய வருமானத்தைப் பெருக்கும் போக்கில் நாட்டில் ஆக்கம் பெற்று வருகிறது. இவ்வகையில் வடநாட்டில் உள்ள சிந்திரியை நம்பிக் கிடக்கிறது திராவிடம்! இலட்சம் இலட்சமாக ஏற்றுமதி செய்கிறது திராவிடம் பணத்தை, சிந்திரிக்கு, ஒவ்வொரு ஆண்டும்!

நெய்வேலியில் ஒரு செயற்கை உரத் தொழிற்சாலையை நிறுவலாம்-திராவிடத்திற்குத் தேவைப்படும் உரத்தை நெய்வேலி தொழிற்சாலை உற்பத்தி செய்யும் - பிரிட்டிஷ் நிபுணர் ஆராய்ந்து கூறியுள்ளனர்.

நெய்வேலியில் ஒரு உரத் தொழிற்சாலையை சொந்தப் பொறுப்பில் நடத்த முன் வந்திருந்தால், அதன் முழு வருமானமும் சென்னை அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கும் போக்கு வரத்துச் செலவு இல்லாத காரணத்தால் திராவிடர்களுக்கு, சிந்திரி உரத்தைக் காட்டிலும் குறைவான விலையில் நெய்வேலி உரம் கிடைக்கும்; உற்பத்திச் செலவு குறையும்; ஏழை திராவிடன் வயிரார உண்ணும் நிலை பெறுவான்.

வெட்கப்பட வேண்டியவர்கள், வேதனைப்பட வேண்டியவர்களாக சென்னை அமைச்சர்கள் இருக்கும்பொழுது,—நெய்வேலி செல்வத்தை நாங்கள் முதலீடு போட்டு சுரண்டுகிறோம்—இலாபத்தில் கொஞ்சம் பங்கு தருகிறோம் என்று இந்தியப்பேரரசு முன்வந்திருப்பதற்கு, பூரிப்படைகிருர்கள்—பல்லிளித்துப் பல்லாண்டு கூறுகிருர்கள்.

நிதிஅமைச்சர் கனம் சுப்ரமணியமும், தொழில் அமைச்சர் கனம் பக்தவத்சலனும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி செல்வத்தைப் பணமாக்க முனைந்திருக்கும் இந்தியப் பேரரசின் பெருங் கருணைக்குப் பாராட்டுதல் தெரிவிக்கிருர்கள்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி குறித்துப் பரீட்சை நடத்திய வகையில் சென்னை அரசாங்கம் செலவளித்துள்ள ரூ. 80 இலட்சத்தை இந்திய அரசாங்கத்திடமிருந்து கேட்டுப் பெறக் கூடாதா என்ருல், அமைச்சர்களான கோவையாரும், மீஞ்சூராரும், கேள்வி கேட்டவர்கள் மீது கனல் கக்குகிருர்கள்—ரூ. 80 இலட்சத்தை மிகமிகச் சிறு தொகை எனப் ‘பிரபுத்தனம்’ பேசுகிருர்கள்!

‘தன்னுயுதமும், தன் கைப் பொருளும் பிறர் கை கொடுக்கும் பேதையும் பதரே’ என்ற மூதுரைக்கு இவ்விரு அமைச்சர்களைக் காட்டிலும் வேறு சிறந்த எடுத்துக் காட்டுகளாகக் கூறக் கூடியவர்கள்—கொள்ளக் கூடியவர்கள் இருக்கிருர்களா என்று முடிவு கட்டும் பொறுப்பை உங்களுக்கே விட்டுவிடுகிறோம். இதுபற்றியே நாளை மேலும் எழுதுவோம்.

கம்யூனிஸ்டுகள் சல்லடம் கட்டுகின்றனர்?

தி.மு. கழக கூட்டத்தைத் தடுக்கும் முயற்சியில் படுதோல்வி!

மதுரை, மார்ச் 6—

2—3—55-ல், மதுரை சுப்பிரமணியபுரம் பகுத்தறிவுப் படிப்பகம் (தி. மு. கழகக் கிளை) சார்பில், தோழர் சி. பி. சிற்றரசு கலந்துகொள்ளும் பொதுக்கூட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு, போலீஸ் அனுமதியும் பெறப்பட்டது. ஆனல், கூட்டம் நடத்தும் தினத்தன்று பகல் 2 மணிக்கு சுப்பிரமணியபுரத்தில் உள்ள ஜீவா படிப்பகத்தார் (கம்யூனிஸ்டுகள்), தி. மு. கழகக் கூட்டம் நடத்த அனுமதிக்கக் கூடாதென்றும், கூட்டத்திற்குக் கொடுத்திருந்த அனுமதியை ரத்து செய்ய வேண்டுமென்றும் மதுரை டவுன் சூப்பரிண்டெண்ட் அவர்களுக்கு விண்ணப்பித்த காரணத்தால், ‘தகராறு நிறைந்த இடம்’ என்ற காரணம் காட்டி, கூட்டம் நடப்பதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன் போலீஸ் அனுமதி ரத்து செய்யப்பட்டது.

கூட்டம் போடும் உரிமை, பிரஜா உரிமை வேண்டுமென்று கூப்பாடு போடும் தோழர்களாலேயே கூட்டம் போடும் உரிமைக்குக் குந்தகம் விளைவிக்கப்பட்டது.

பிறகு கூட்டத்தை, சுப்பிரமணியபுரம் அருகிலுள்ள ஆண்டாள்புரத்தில் நடத்தி, கம்யூனிஸ்டுகளின் போக்கைக் கண்டித்தும், பொதுக் குழுவில் நிறைவேற்றிய ‘தொழிற் சங்கம் அமைக்கும் கொள்கை,’ முறைகளைப் பற்றியும் தோழர்கள் சி. பி. சிற்றரசு, எஸ். முத்து, சே. எஸ். சந்தானம், மு. வசனப்பித்தன் ஆகியோர் பேசினர்.

கூட்டம் நடக்க இருந்த இடத்தை திடீரென மாற்றியும் கூட, பொதுமக்கள் பெருந்திரளாகக் கூடியிருந்தனர். (ந. நி)

ரூ. 28 லட்சம் செலவிடப்பட்டபின் திட்டம் கைவிடப்படுகிறது

மத்தியப் பிரதேச சர்க்காரின் போக்கு!

நாகபுரி, மார்ச் 3—

மத்திய பிரதேச சர்க்கார், இறுதியாக, வெயின் கங்கா மின்சார நீர்ப்பாசனத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டதாக, சட்டசபையில் விவசாய மந்திரி சங்கர்லால் திவாரி அறிவித்திருக்கிருர்.

பந்தாரா மாவட்டத்தில் அமைப்பது என்றிருந்த அத்திட்டத்திற்கு ஆரம்பச் செலவாக ரூ. 28 லட்சம் சர்க்கார் செலவிட்டது என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிருர்.

திட்டம் கைவிடப்பட்டதற்குக் காரணம், மத்திய அரசாங்க நிபுணர் திட்டம் நிறைவேற்றப்பட்டால் ஏராளமான விளைநிலங்கள் அணைக்கட்டிற்காக பாழடிக்கப்பட்டுவிடும் என்று கருதியதேயாம்!

அணைக்கட்டினுள் சுமார் 2,64,000 ஏக்கர் விளை நிலம் அடங்கிவிடும்; ஆனல், அணைகட்டி முடித்த பிறகு அதனல் நீர்ப்பாசனம் பெற்று பயனடைவன பத்து லட்சம் ஏகர் காட்டுப் பிரதேசம் மட்டும்தான் என்றும் நிபுணர் கூறினராம்.

இத்திட்டம் இயற்கைக்குப் புறம்பானதென்றும், செலவிற்கான மதிப்பீடு திருப்திகரமானதாயில்லை என்றும் அவர்கள் மேலும் கூறினர் என்று மந்திரி அறிவித்துள்ளார்.

சந்திர மண்டலத்திற்கு!

20 ஆண்டுகளில் செல்ல முடியுமாம்!

பர்மிங்ஹாம், மார்ச் 6—

“இன்னும் இருபதாண்டுக் காலத்திற்குள் சந்திரமண்டலம் சென்றுவிட முடியும்”

என்று, இங்கிலாந்துநாட்டு விமான அமைப்பு நிபுணர் ஒருவர் கருத்தறிவித்திருக்கிருர்.

தீண்டாமை, சாதிப்பிரிவை ஒழிக்க!

புதுடில்லியில் விவாத அரங்கு

தீண்டாமையையும், சாதி முறையையும் ஒழிப்பது பற்றிய ஒரு விவாத அரங்கு, புதுடில்லியில், வரும் செப்டம்பர் திங்களில் நடைபெறும். இந்திய சமூக சேவை மாநாடு இதற்கு ஏற்பாடு செய்யும்.

இந்த அரங்கத்தின் நோக்கம், சமூக, பொருளாதார, மனோதத்துவக் கல்வி, சட்ட, அரசியல் கோணங்களிலிருந்து தீண்டாமை, சாதிப்பிரிவு இவற்றை ஒழிப்பதற்கான பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காகவே என்று தெரிகிறது.

இந்தியாவில், 1953-ம் ஆண்டில், மொத்தம் 4,26,584 டன் நைட்ரஜன் கலந்த ரசாயன உரங்களும், 50,000 டன் பாஸ்பேட் கலந்த ரசாயன உரங்களும் உபயோகிக்கப்பட்டன. 1952-ம் ஆண்டில் இவற்றின் உபயோக அளவு முறையே 2,76,258 டன்னும், 28,705 டன்னும் ஆக இருந்தன.

'கோஷ்டிச் சண்டை, சாதிப்பித்து, வகுப்புவாதம்'

காங்கிரஸ் கட்சியில் இடம் பெற்றுள்ளன

காங்கிரஸ் செயற் குழு ஒப்பம்

அவற்றை ஒழிக்க ஒரு உயர்தரக் குழுவாம்!

புதுடில்லி, மார்ச் 6—

காங்கிரஸ் கட்சி இன்னும் அதிகமான ஒற்றுமையுடனும், கட்டுப்பாடாகவும் இயங்குவதற்கும், கட்சிக்குள் கோஷ்டிகள் ஏற்படாமல் தடுக்கவும், கட்சிக்குள் தலைகாட்டும் சாதிப்பித்து, வகுப்புவாதம் ஆகிய உணர்ச்சிகளை ஒழிக்கவும் வழிவகைகளைக் காண்பதற்காக 9 பேர் கொண்ட நிரந்தரக் குழு ஒன்றை அ. இ. கா. செயற்குழு நியமித்துள்ளதாம்.

ஆவடி காங்கிரஸ் தீர்மானங்களை — குறிப்பாக, 'சோஷலிசம் மாதிரி, தீர்மானத்தை அமுல் நடத்த தீவிர நடவடிக்கைகளை எடுக்குமாறு மாநில, மத்திய சர்க்கார்களை செயற்குழு கேட்டுக் கொண்டிருக்கிறதாம்.

இத்தீர்மானங்களை விளக்கி நாட்டின் சந்துபொந்துகளிலெல்லாம் கூட பிரச்சாரம் செய்யுமாறு எல்லாக் காங்கிரஸ்காரர்களுக்கும் குழு கட்டளையிட்டுள்ளதாம்.

கார் ஓட்ட அணுசக்தி:

ரஷ்ய விஞ்ஞானிகள் முயற்சி

மோட்டார் கார்களுக்கு அணுசக்தியால் இயங்கும் எஞ்சின் ஒன்றை தயாரிக்க ரஷ்ய விஞ்ஞானிகள் முயற்சித்து வருகின்றனராம். இதற்கு மிகச் சிறிய அளவு யுரேனியம் (அணுசக்தி மூலப் பொருள்) போதுமாம். ஒரு 'சிலிண்டரில்' அணு சக்தியை வாயு ரூபத்தில் தேக்கி வைத்து, வாயு அழுத்தத்தால் பிஸ்டனை மேலும் கீழும் இயங்கச் செய்வதின் மூலம் காரை ஓட்டுவதற்கு முயற்சிக்கப்படுகிறதாம்!

இந்தியாவில் தற்போது ஆண்டொன்றுக்கு 18 லட்சம் டன் வெள்ளைச் சர்க்கரை உபயோகிக்கப்பட்டு வருகிறது.

கிழக்கு பாகிஸ்தானில் கவர்னர் ஆட்சி ஒழியும்?

முகம்மது அலி கொள்கையில் மாற்றம்

கராச்சி, மார்ச் 7—

கிழக்கு பாகிஸ்தானில் கடந்த 11 மாதங்களாக நடைபெற்று வரும் கவர்னரின் ஆட்சி இந்த மாத இறுதியில் நீங்கிவிடுமென்று தெரிய வருகிறது.

கடந்த மே மாதத்தில் கிழக்கு பாகிஸ்தானில் நடைபெற்ற கலவரங்களை ஒட்டி, பஸ்லுல் ஹக் தலைமையிலிருந்த ஐக்கிய முன்னணி அரசாங்கத்தையும், சட்டசபையையும் கலைத்துவிட்டு கவர்னராட்சி பிரகடனப்படுத்தப்பட்டது.

நேற்று முன் தினம் நடைபெற்ற பாக். மந்திரி சபைக் கூட்டத்தில் கவர்னர் ஆட்சியை ஒழித்து, மீண்டும் மக்களாட்சியை நிறுவுவது என்று முடிவாகியிருப்பதாயும், இந்த முடிவு பிரதமர் முகம்மது அலியின் கொள்கையில் ஒரு பெரும் மாறுதலாகும் என்றும், நிலைமையை நேரில் அறிந்துவர முகம்மதுஅலி மார்ச் இறுதியில் டாக்கா செல்வார் எனவும் கூறப்படுகிறது.

அடுத்த காங்கிரஸ்!

புதுடில்லி, மார்ச் 6—

அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் 61-வது 'மகா சபை'க் கூட்டம் பஞ்சாப் மாநிலத்தில் கூடுமென்று இன்று காங்கிரஸ் செயற்குழு செய்த முடிவிலிருந்து தெரிகிறது. 1956 ஜனவரி 10 முதல் 20-ந் தேதிக்குள் மாநாடு நடைபெறும்.

கால்நடைகளைப் பராமரிக்கத் திட்டம்

புதுடில்லி, மார்ச் 7—

நாட்டின் செல்வத்தை வளர்க்க 'கோ சாலை'களையும், 'பிஞ்சராப் போல்'களையும் ஏற்படுத்தி அபிவிருத்தி செய்வதற்காக, 1 கோடி 36 லட்சம் ரூபாய் செலவில் திட்டம் தீட்டி, அதனை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கவேண்டும் என்று மத்திய 'கோ சம்வர்த்தன'க் குழு சிபாரிசு செய்திருக்கிறதாம்.

கால்நடைப் பராமரிப்பில் ஈடுபட்டுள்ள சுமார் 3 லட்ச நாடோடிக் குடும்பங்களின் குடியமைப்புக்காக, ரூ 1,04,16,600 செலவில் மற்றொரு திட்டத்தையும் அந்தக் குழு சர்க்காருக்கு சிபாரிசு செய்துள்ளது.

இப்போது நாட்டில் 3000த்திற்குமதிகமான 'கோ சாலை'களும், 'பிஞ்சரா போல்'களும் தனிப்பட்டவர்களால் நடத்தப்படுகின்றனவாம்.

அங்கு 6 லட்சம் கால்நடைகள் வருடந்தோறும் சுமார் ரூ 7 கோடி செலவில் பராமரிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

மீண்டும் நில நடுக்கம்!

குவெட்டா நகரில், 3-ந் தேதி இரவு மீண்டும் நில நடுக்கம் ஏற்பட்டதாம்! முந்திய அதிர்ச்சிகளால், சுமார் 10,000 வீடுகள் நாசமடைந்தனவாம்! மீண்டும் அந்த வீடுகளைக் கட்டுவதற்கு ரூ. 70—லட்சம் அல்லது 1 கோடி செலவாகுமென மதிப்பிடப்படுகிறது.

ரூ. 70 கோடி உதவி?

இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்காக எழுபது கோடி ரூபாயை அமெரிக்காவிடம் கேட்கப்போவதாக இலங்கைப் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். எப்படியாவது இதை வாங்கியாகவேண்டுமென்றும், நிபந்தனையின்றி இத்தொகை கிடைக்குமெனத் தாம் நம்புவதாகவும் அவர் கூறினாராம்!

மாநில புனரமைப்புக் குழு அறிக்கை

ஜூன் திங்களில் வெளியாகும்

புதுடில்லி, மார்ச் 6—

மாநில புனரமைப்புக் குழுவின் அறிக்கை ஜூன் திங்களில் வெளியாகுமென்று எதிர்பார்க்கப்படுவதாக மக்கள் சபையில் உதவி உள்நாட்டிலாகா மந்திரி தாதர் கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மாநில புனரமைப்புக் குழுவின் அறிக்கையை சர்க்கார் பரிசீலித்த பிறகு அடுத்த ஆண்டு நிதிக் குழு நியமிக்கப்படலாமென்றும், தோட்ட வரி நில வசூலை பல்வேறு மாநிலங்களிடையே பிரித்துக் கொடுக்கும் பிரச்சினை அந்தக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படலாமென்றும் நிதியமைச்சர் தேஷ்முக் கேள்வி ஒன்றிற்கு பதிலளித்திருக்கிறார்.

தி. மு. கழகக் கிளைகள் தேர்தல் பற்றிய அறிக்கை

தி. மு. கழகச் சட்ட திட்டங்கள் 97-வது பிரிவின்படி கீழ்க்கண்ட மாவட்டங்களிலுள்ள சிற்றூர், பேரூர்க் கிளை [சிறிய-பெரிய பஞ்சாயத்து (Minor-Major Panchayat) ஆட்சிப்பகுதி] —நகரக் கிளை [நகர மன்ற (Municipality) ஆட்சிப் பகுதி] உறுப்பினர்கள் தங்கள் தங்கள் செயற்குழுக்களையும் மாவட்டப் பிரதிநிதிகளையும் தேர்ந்தெடுக்க 27—3—55 ஞாயிற்றுக் கிழமையைத் தேர்தல் நாளாகத் தேர்ந்தெடுத்திருக்கிறோம்.

அண்மையில் தேர்தல் நடத்தியிருந்தாலும், அல்லது புதிதாகக் கிளை துவக்கியிருந்தாலும் அப்படிப்பட்ட கிளைக் கழகங்களும் 27—3—55 ஞாயிறன்று கூடி செயற்குழுவை உறுதி செய்துகொண்டு, மாவட்டப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவோ உறுதிப்படுத்திக்கொள்ளவோ வேண்டும்.

கழக உறுப்பினர்களாய் இருந்துவருபவர்கள் தங்கள் உறுப்பினர் நிலையை இப்பொழுது புதுப்பித்துக் கொள்ள வேண்டியதில்லை. 28—2—55-ஆம் நாளுக்கு முன் உறுப்பினராகி இருப்பவர்கள் மட்டுமே இந்தத் தேர்தலில் வாக்காளர்களாக இருக்க உரிமையுடையவராவர். உறுப்பினர் சேர்ப்பது இரண்டு திங்கள்களுக்கு நிறுத்தி வைக்கப்படுகிறது. 1—3—55-ஆம் நாளுக்கு மேல் புதிதாக உறுப்பினராகச் சேர்பவர்கள் இந்தத் தேர்தலில் கலந்துகொள்ளக் கூடாது. 1—3—55-க்குப் பிறகு அமைக்கப்பெறும் கிளைகள் இப்பொழுது பதிவு செய்துகொள்ளப்படமாட்டா. புதிய பொதுக் குழு அமைந்ததற்குப் பிறகுதான் அவை கவனிக்கப் பெறும்.

கிளைக் கழகங்களெல்லாம் 27—3—55-ல் தேர்தல் நடத்தித் தேர்தலின் முடிவுகளை, தலைமைக் கழகத்திலிருந்து அனுப்பிவைக்கப் பெறும் "கிளைக்கழகப் பதிவுச் சீட்டி"ல் தெளிவாகக் குறித்து 31—3—55-ம் நாளுக்குள் தலைமை நிலையத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், மாவட்டப் பிரதிநிதிகள் ஆகியோரின் முகவரிகளைத் தெளிவாக அந்தச் சீட்டில் எழுதி அனுப்பவேண்டும்.

தேர்தலின் முடிவு குறிக்கப்பட்ட கிளைக்கழகப் பதிவுச் சீட்டு, தலைமை நிலையம் வந்து சேர்ந்தால்தான், ஒவ்வொரு கிளைக் கழகமும் தலைமைக் கழகத்தால் ஏற்றுக் கொள்ளப்படும்.

27—3—55-ல் தேர்தல் நடத்தும் கிளைக்கழகம் மட்டுமே மாவட்டக்கழகத் தேர்தலில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படும். முன்பே தேர்தல் நடத்தியாகிவிட்டது என்று இருத்தல் கூடாது.

27—3—55-ல் கிளைக் கழகத் தேர்தல் நடத்தவேண்டிய மாவட்டங்கள்:

- சென்னை
- செங்கற்பட்டு
- தென் ஆற்காடு
- வட ஆற்காடு
- சேலம்
- கோவை
- தஞ்சை
- திருச்சி
- மதுரை
- இராமநாதபுரம்
- திருநெல்வேலி
- நாஞ்சில்
- கேரள, ஆந்திர, கர்நாடகப் பகுதிகள்

தேர்தலில் கடைப்பிடிக்க வேண்டிய விதிகள்:

1. ஒவ்வொரு சிற்றூரிலும் (சிறிய பஞ்சாயத்து ஊர்—Minor Panchayat) 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட சிற்றூர்க் கிளை ஒன்றுதான் இருக்க வேண்டும்.
2. ஒவ்வொரு பேரூரிலும் (பெரிய பஞ்சாயத்து ஊர்—Major Panchayat) 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட பேரூர்க் கிளை ஒன்றுதான் இருக்க வேண்டும்.
3. ஒவ்வொரு நகரிலும் (நகராட்சிப் பகுதி—Municipality) 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட நகரக் கிளை ஒன்றுதான் இருக்க வேண்டும்.
4. சென்னையில் உள்ள ஒவ்வொரு வட்டத்திலும் (Division) 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட வட்டக் கிளை ஒன்றுதான் இருக்க வேண்டும்.
5. சிற்றூர் — பேரூர் — நகரம் — சென்னை வட்டம் ஆகிய கிளைகளின் தேர்தல்கள் நடைபெறும்போது, அந்தந்தக் கிளைகளின் செயலாளர்கள் குறிப்பிடும் ஓரிடத்தில் வந்து எல்லா உறுப்பினர்களும் கூடவேண்டும். [நகரங்களிலுள்ள வட்டாரங்கள் (Municipal Wards) இப்பொழுது தேர்தல் நடத்த வேண்டியதில்லை. நகரக் கிளை தேர்தல்தான் இப்பொழுது நடைபெற வேண்டும். நகரிலுள்ள எல்லா உறுப்பினர்களும் நகரக் கிளைத் தேர்தலில் ஒருபடியாகக் கலந்துகொள்ள வேண்டும். நகரக் கிளை அமைந்த பிற்பாடு வசதியானபோது 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்டு ஒவ்வொரு வட்டாரமும் (Municipal Ward) நகரக் கிளைச் செயலாளருக்கு அறிவித்துவிட்டு, நகரக் கிளைச் செயற்குழுவின் மேற்பார்வையிலும், கட்டுப்பாட்டின்கீழும் ஒரு வட்டாரக் கிளையை அமைத்துக் கொண்டு இயங்கலாம்.]
6. ஒவ்வொரு கிளையும் செயலாளர் ஒருவர், துணைச் செயலாளர் ஒருவர், பொருளாளர் ஒருவர் ஆகியோரை அலுவலாளராகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
7. செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் ஆகியோர் உள்ளிட்ட செயற்குழு 11 பேருக்குக் குறையாமலும், 21 பேருக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.
8. சிற்றூர்க் கிளை ஒரு பிரதிநிதியையும், பேரூர்க் கிளை ஒரு பிரதிநிதியையும், சென்னை வட்டக் கிளை இரண்டு பிரதிநிதிகளையும், நகரக் கிளை அந்தந்த நகர மக்கள் தொகையில் ஒவ்வொரு இருபதினாயிரம் மக்களுக்கும் ஒவ்வொரு பிரதிநிதி வீதமும் அந்தந்த மாவட்டக் கழகத்துக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கவேண்டும்.
9. தேர்தல் கிளைக் கழகத்தின் முன்னைய செயலாளராலேயே நடத்தப்பட வேண்டும். முன்னைய செயலாளரே தேர்தலுக்கு நிற்பதாக இருந்தால், கூடியிருக்கும் பொது உறுப்பினர் கூட்டம், தம்மில் ஒருவரைத் தேர்தல் நடத்துபவராகத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும். சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மாவட்டக் கழகம் அனுப்பி வைக்கும் தேர்தல் ஆணையாளரின் தலைமையில்தான் வட்டக்கிளைத் தேர்தல் நடைபெற வேண்டும். பிற மாவட்டங்களில் அவசியப்பட்டால் குறிப்பிட்ட கிளைகளின் தேர்தல்களை நடத்தி வைக்க, மாவட்டச் செயலாளர், தேர்தல் ஆணையாளர்களை அனுப்பி வைக்கலாம்.
10. தேர்தல் நடைபெறும்போது வாக்குரிமை பற்றிய தகராறுகள் கிளம்புமேயானால், கூடும் கழக உறுப்பினர்கள், அவற்றைக் கூட்டத் தலைவரின் தீர்ப்புக்கு விட முயல வேண்டும். அவசியமானால் கூடியுள்ள பெரும்பான்மையோரின் வாக்குகளால் முடிவெடுக்க முயலலாம்.
11. தேர்தல் நாளுக்கு ஒரு வாரத்திற்கு முன்பே, கிளைச் செயலாளர், கழக உறுப்பினர்கள் அனைவரும் அறியும் வகையில் தேர்தல் நடைபெறும் செய்தியையும், தேர்தல் நடைபெறும் இடத்தையும் விளம்பரப்படுத்தி உறுப்பினர் கூட்டம் கூட்ட வேண்டும்.
12. தேர்தல் பற்றிய தகராறு இருந்தால் மாவட்டக் கழகத்தின்மூலம், தலைமைக் கழகத்துக்கு விண்ணப்பம் செய்து நீதி கோரலாம். தலைமைக் கழகம் பிற்பாடு ஆய்ந்தறிந்து தீர்ப்புக் கூறும். தேர்தல் நாளன்று தகராறு கிளப்பக்கூடாது.

சி. என். அண்ணாதுரை,
பொதுச்செயலாளர்

'அறிவகம்', சென்னை.
5—3—55

உத்திர பிரதேசத்தில் மதுவிலக்கு

நாட்டுச் சாராயம், கஞ்சா, அபின் உற்பத்தி குறைந்துவிட்டதாம்

உத்திர பிரதேச மாநிலத்தில் 1959-க்குள் அபின் உட்கொள்ளப்படுவது முழுவதும் தடுப்பதற்காக, இப்போது அபின் உண்பவர்கள் பற்றிய புள்ளி விபரங்கள் சேகரிக்கப்படுகின்றனவாம்.

"வரும் எப்ரல் முதல் அபின் உண்பவர்கள் பதிவு செய்யப்பட்டு கணக்கிடப்படுவார்கள்," என்று கலால் இலாகா மந்திரி சட்டசபையில் அறிவித்திருக்கிறார்.

கஞ்சா உண்பதை மாநில முழுவதும் தடை செய்வது பற்றிய சர்க்காரின் திட்டம் இன்னும் ஒரு மாதத்திற்குள் வெளியாகும் என்றும் அறிவிக்கப்பட்டது.

மந்திரி மேலும் பேசுகையில், 1946-லிருந்து தொடர்ச்சியாக, நாட்டுச் சாராயம், கஞ்சா, அபின் முதலியவை உற்பத்தி செய்யப்படுவது படிப்படியாகக் குறைந்து வந்திருக்கிறது என்று தெரிவித்துவிட்டு, இங்கு மதுவிலக்கு அமுல் செய்வதற்காக ஏற்படும் செலவுகளுக்காக ரூ. 1,02,00,000 கோரினார்.

விவாதத்தின்போது காங்கிரஸ், மற்றும் எதிர்க் கட்சியினர், 'சர்க்கார் சீக்கிரம் மதுவிலக்கினை தீவிரமாக அமுல் செய்ய வேண்டு'மெனக் கோரினர்

ஆந்திரத் தேர்தல் நிலைமை

கர்நூல், மார்ச் 7—

அறிவிக்கப்பட்டு வரும் ஆந்திரத் தேர்தல் முடிவுகள் தொடர்ந்து காங்கிரசுக்கு சாதகமாக இருந்து வருகின்றன.

பிரபல கம்யூனிஸ்டு தலைவர்கள் நாகி ரெட்டி, 'பொலிட் பீரோ' உறுப்பினர் நாகேஸ்வரராவ் ஆகியோர் தோற்றுப்போன கம்யூனிஸ்டுகளில் குறிப்பிடத் தகுந்தவர்களாயிருந்தனர்.

நேற்று அறிவிக்கப்பட்ட முடிவுகளில் ஆந்திரகேசரி பிரகாசம் காங்கிரஸ் சார்பிலும், தோழர் வெங்கடேசுவரலு கம்யூனிஸ்டு கட்சி சார்பிலும் வெற்றி பெற்றவர்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள்

முன்னாள் உதவி முதன் மந்திரி சஞ்சீவி ரெட்டி நேற்றைய முன்பு தின முடிவுகளின்படி மாபெரும் வெற்றி பெற்றிருக்கிறார்.

இன்றுள்ள கட்சி நிலைமைகள் :—

காங்கிரஸ் முன்னணி (காங்கிரஸ் 117 ; கிருஷிக் லோக் 21; பிரஜா கட்சி 5)	143
கம்யூனிஸ்ட்	13
ம சோ கட்சி	13
சுயேச்சை	21

196 இடங்களில், 190 இடங்களுக்கு முடிவு தெரிந்துவிட்டது: இன்னும் 6 இடங்களேதான் பாக்கியுள்ளன.

முன்பு ஆந்திர சட்ட சபையில் உறுப்பினர்களாயிருந்த 52 கம்யூனிஸ்டுகளில் 6 பேர்கள் மட்டுமே திரும்பவும் இப்போது வெற்றி பெற்றிருக்கின்றனர்.

தேர்தல் செலவு :

ஆந்திர பொதுத் தேர்தலுக்காக, ரூ. 26,64,900 செலவாகியிருக்குமென மதிப்பிடப்படுகிறது.

இந்தியாவில்தான் அரிசி உற்பத்தி அதிகமாம்!

அரிசி உற்பத்தியை அதிகப்படுத்துவதற்காக நடைபெறும் சர்வதேச முயற்சிகளில் இந்தியா தலைமை தாங்குகிறது.

இந்தியாவில்தான் குறிப்பிடத் தகுந்த அளவு அரிசி உற்பத்தி அதிகரித்திருப்பதாக ஐ. நா.-வின் உணவு விவசாய நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கை கூறுகிறது.

1953—54-ம் ஆண்டில், இந்தியாவிலிருந்து சுமார் ரூ. 24,24,73,000 பெறுமானமுள்ள கனி மாங்கனீஸ் ஏற்றுமதி செய்யப்பட்டது.

சென்னை சட்டசபையில்....

★

கூட்டுறவு சங்கங்கள்

"யுத்த காலத்தில் 'கட்டுப்பாடு' விதிக்கப்பட்டிருந்த பொருள்களை விநியோகித்து இலாபமடைந்து வந்த கூட்டுறவுச் சங்கங்கள், இப்போது கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டுவிட்டதால் தனிப்பட்ட வியாபாரிகளுடன் இலாபகரமாகப் போட்டியிட முடியாமல் இருக்கும் நிலையை எண்ணி, இத்தகு சங்கங்களின் எதிர்காலம் பற்றி கவனிக்க குழு ஒன்றை அரசாங்கம் நியமிக்குமா? என்று ஒரு உறுப்பினர் கேட்டபோது, மந்திரி எ. பி. ஷெட்டி பதிலளிக்கையில், "கூட்டுறவு நிர்வாகச் சீரமைப்புக் காரியங்களைக் கவனிக்க ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ள குழு இதனையும் கவனிக்கும்," என்று குறிப்பிட்டிருக்கிறார்.

வெங்காயம்!

சென்னை மாநிலத்திலிருந்து வெங்காய ஏற்றுமதி கோட்டா அளவை அதிகரிக்க வேண்டுமென இந்திய சர்க்காரை சென்னை சர்க்கார் வற்புறுத்தி வருவதாயும். சென்னையின் கோரிக்கைக்கு டெல்லி இணங்கக்கூடும் என நம்பப்படுவதாயும், கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் மந்திரி பக்தவத்சலம் குறிப்பிட்டிருக்கிறார்.

விவசாயக் கல்லூரி

விவசாயக் கல்லூரியில் பி. எஸ். ஸி. வகுப்பில் பிரச்சாரம், விளம்பரம் ஆகிய வகுப்புகளை பிரதேச மொழியில் நடத்தலாமென்று விவசாய இலாகா அதிகாரி தெரிவித்துள்ளார் என்றும், இது குறித்து பல்கலைக் கழகத்திடமிருந்து அரசாங்கத்திற்கு எதுவும் வரவில்லை என்றும் கேள்விக்குப் பதிலளிக்கையில் விவசாய மந்திரி குறிப்பிட்டிருக்கிறார்.

ஓயாத தவறுகள்

கோதுமை விலை 1951-ல் தவறாக நிர்ணயிக்கப்பட்டதால், அரசாங்கத்திற்கு ரூ. 74,527—13—4 நஷ்டம் ஏற்பட்டதென்றும், இந்த நஷ்டமேற்படுவதற்கு பொறுப்பாளர்களாயிருந்தவர்கள் மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாயும் தொழில் மந்திரி பக்தவத்சலம் குறிப்பிட்டிருக்கிறார்.

மொத்த நஷ்டத்தில், பின்பு ஏற்றுமதி செய்யப்பட்ட மைதாமாவின் விலையை அதிகரித்து ரூ. 48,809—9—8 சரிக்கட்டப்பட்டது என்றும், பின்னர் கோதுமை மீதிருந்த கட்டுப்பாடு நீக்கப்பட்டுவிட்டதால் எஞ்சிய நஷ்டம் சரிக்கட்டப்பட முடியவில்லை என்றும் கூறியிருக்கிறார்

'அந்தத் தொல்லை' அவர்களுக்குத் தெரியாது!

நகரில் ஓடுகிற பஸ்களில் டிக்கெட் கொடுப்பதற்குக் காலதாமதமாவதினால் பிரயாணிகள் படும் தொல்லையைக் குறைக்கும் வகையில், பெரிய பஸ்களுக்கு இரு கண்டக்டர்கள் நியமிக்க வேண்டும் என்று வற்புறுத்தி கேள்வி கேட்கப்பட்டபோது, மந்திரி பரமேசுவரன் 'அம்மாதிரி செய்ய இப்போது உத்தேசமில்லை' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மனிதனை மனிதன் இழுக்கும் கொடுமை!

"ரிக்ஷா இழுப்பதை ஒழிக்கும்படி மத்திய அரசாங்கத்திடமிருந்து தாக்கீது வந்தது; 'ரிக்ஷா இழுப்பது கடினமானது, இழுக்கு நிறைந்தது,' என்பதை சென்னை அரசாங்கம் ஒப்புக்கொள்கிறது; ஆனால், இப்போது ரிக்ஷா இழுப்போர்களுக்கு மாற்றுவேலையும், சாதாரண மக்களுக்கு ரிக்ஷாபோன்ற சிக்கனமான மாற்றுப் போக்குவரத்துச் சாதனமும் கிடைக்கும்போது, ரிக்ஷா ஒழிப்பை அமுல் செய்ய முடியும்," என்று, மந்திரி பரமேஸ்வரன் குறிப்பிட்டிருக்கிறார்.

குறைக்கமாட்டார்களாம்!

"இரவில் வேலை செய்யும் நர்சுகளுக்கு மாலை 7 மணி முதல் காலை 6 மணி வரை வேலை செய்வது அதிகமானதாகையால் அந்த வேலை நேரம் ஆறு மணி நேரமாகக் குறைக்கப்படுமா?" என்று கேட்கப்பட்டபோது, சுகாதார மந்திரி, அம்மாதிரி செய்ய உத்தேசமில்லை என்றும், மேலும் இரவு வேலை செய்யும் நர்சுகள் இரவு முழுதும் விழித்துக் கொண்டிருப்பதில்லை என்றும் கூறியிருக்கிறார்.

'அழிவுக் கருவி'கள் பரிசோதனை!

அமெரிக்க விஞ்ஞானிகள் கோரிக்கை

"சரியோ-தப்போ, அமெரிக்காவின் அணுகுண்டு, நீர்வளிக் குண்டு பரிசோதனைகளை ஆசியா எதிர்க்கிறது; 'மற்ற நாடுகளின் பாதுகாப்பையும், சுயநலத்தையும் அமெரிக்கா துச்சமாக மதிக்கிறது,' என ஆசியா நம்புகிறது; ஆகவே அக்குண்டுகளைப் பரீட்சிப்பதால் எழும் அபாயங்களை ஆராய்ந்து அளவிடுவதற்கு விசேட ஐ. நா. குழு ஒன்றை அமைக்க வேண்டும்; இதற்கு அமெரிக்க சர்க்கார்தான் முதலில் முயற்சி எடுக்க வேண்டும்,"

என்று, அணுகுண்டின் முதல்வர் ஆப்பன்ஹைமர் உள்ளிட்ட அமெரிக்க விஞ்ஞான மேதைகள் சம்மேளனம் கோரியுள்ளது.

இந்தியாவில் டீசல் - எஞ்சின் உற்பத்தி

புதுடில்லி, மார்ச் 6—

கடந்த 1954-ம் ஆண்டில் இந்தியாவில் டீசல் எஞ்சின் உற்பத்தி 100 சதவிகிதம், அத்தொழிலுக்கு சர்க்கார் அளித்த உதவியினால் அதிகரித்துள்ளது என்று தெரிகிறது.

1953-ல் 3,716 ஆக இருந்த டீசல் எஞ்சின் உற்பத்தி 1954-ல் 6,652 ஆக உயர்ந்திருக்கிறதாம்.

இந்த டீசல் எஞ்சின் உற்பத்தியில் முடக்கப்பட்டுள்ள மூலதனம் ஏறத்தாழ ரூ. 1,64,94,000 ஆகும்; இதில் சுமார் 10 சதவிகிதம் வெளிநாட்டு மூலதனம்.

இந்த உற்பத்தியில் சுமார் 2,800 பேர் வேலை பெற்றுள்ளனர் என்று தெரிகிறது.

'பம்பு' உற்பத்தி செய்யும் தொழிலில் 61,000 'யூனிட்டு'கள் உள்ளன.

இத்தொழிலில் 3,530 பேருக்கு வேலை கிடைத்துள்ளது. இத்தொழிலில் சுமார் ரூ. 2,10,30,000 மூலதனம் போடப்பட்டுள்ளதாம் இது அனேகமாக, முழுவதும் இந்திய மூலதனம்தான்.

சென்ற ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட 3,700 பம்பு செட்டுகள் இந்த ஆண்டு 8,650 ஆக அதிகமாகியுள்ளதாம்.

இந்த டீசல் எஞ்சின், பம்பு செட்டு ஆகியவை அநேகமாக விவசாயத் துறைக்குத் தேவையானவையாகவே தயாரிக்கப்படுகின்றன என்றும் கூறப்படுகிறது.

இணைந்துவிடுவர்?

அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி (நேதாஜி போஸ் நிறுவியது) காங்கிரஸ் கட்சியுடன் இணைந்துவிட முடிவு செய்ததாம்.

நேற்றும் இன்றும் கூடிய கட்சியின் கொள்கைக் குழு, மத்திய செயற்குழு ஆகியவற்றின் கூட்டுக் கூட்டத்தில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது

1955 மார்ச் இறுதிக்குள் காங்கிரஸ் கட்சியின் உறுதி மொழிப் பத்திரத்தில் கையொப்பமிட்டு காங்கிரசுடன் இணைவதைப் பூர்த்தி செய்வது என்றும்முடிவாக்கியுள்ளதாம்.

கழகக் கூட்டம்

★

தெள்ளூர்

10—3—55 மாலை 6 மணிக்கு

தலைவர் : எம். சாந்திநாதன்

பேசுவோர் :

ஆ. மணிஎழிலன்
அ. கருத்தோவியன்
மு. சாமிநாதன்
மு. தருமராசன்

சென்னை நகர, உதவி பெறும் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள் சங்கம்

"9—3—55 மாலை 5-30 மணிக்கு ராஜமன்னார் செட்டி ஆரம்பப் பள்ளியில் (94-95 புதுத் தெரு, மண்ணடி) சங்கத்தின் விசேட பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்.

"அதுபோது சர்க்கார் நியமித்துள்ள ஆரம்பக் கல்வி ஆய்வுக் குழு வெளியிட்டுள்ள கேள்விப் பட்டியல் குறித்தும், 27—3—55ல் சென்னை மாநில ஆசிரியர் - நிர்வாகிகள், நிர்வாகிகள் ஆகியோரடங்கிய மாநாடு ஒன்று நடத்த ஏற்பாடு செய்வது பற்றியும் ஆலோசிக்கப்படும்,"

என்று செயலாளர்களான என் நடேச முதலியார், டி. என் லட்சுமிபதி இருவரும் அறிவிக்கின்றனர்.

திருமணங்கள்

10—3—55 காலை 9 மணிக்கு; சென்னை, இராயப்பேட்டை, லாயிட்ஸ் ரோடு, 155-எண்ணுள்ள இல்லத்தில், தோழர் எம். என். கிருஷ்ணன்—தோழியர் பார்வதி திருமணம் தோழர் என். எஸ். கிருஷ்ணன் தலைமையில் நடைபெறும். பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் வாழ்த்துரை வழங்குவார்.

* * *

9—3—55 காலை 9 மணிக்கு; சேலூரில் (வ. ஆ.) தோழர் கே. பி சின்னப்பா—தோழியர் அமராவதி திருமணம், தோழர் கே. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

ரூ. 67 லட்சம் மதிப்புள்ள ஆபரணங்கள் களவு

பரூக் மன்னரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டவை

கெய்ரோ, மார்ச் 7—

எகிப்து மன்னரின் அரண்மனையிலிருந்து நகீப் காலத்தில் பறிமுதல் செய்யப்பட்ட சுமார் ரூ. 67 லட்சம் மதிப்புடைய ஆபரணங்கள் காணாமற் போய்விட்டதாக நிதி இலாகா அறிவித்துள்ளதாம்.

காணாமற்போன ஆபரணங்கள் சிலவற்றை தங்கள் வீட்டில் வைத்திருந்ததாகக் கூறப்படும் மூன்று நபர்களை போலீசார் கைது செய்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

சர்வதேச ஆபரணத் திருடர்களின் கூட்டமொன்று இத்திருட்டில் சம்பந்தப்பட்டிருப்பதாகப் போலீசார் சந்தேகிக்கிறார்களாம்

வெளிநாடு செல்லும் விமானக் கூடங்களில் எல்லாம பலத்த கண்காணிப்பு இருந்துவருவதாகக் கூறப்படுகிறது

பற்றாக்குறை மயம்!

சென்னை, மார்ச் 7—

சென்னை நகர சபையின் 1955-56ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ 2,33,520 துண்டு விழுகிறது.

திட்டம் இன்றுமாலை சபைக் கூட்டத்தின்போது வரிநிதிக்குழுத் தலைவர் இராதாகிருஷ்ண பிள்ளை அவர்களால் தாக்கல் செய்யப்பட்டது.

இந்திய சர்க்கார், குறைந்த வருமானப் பிரிவினர்களுக்கான குடியிருப்பு திட்டத்தின் கீழ், முதலாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் எஞ்சிய காலத்திற்கு பதினைந்து மாநிலங்களுக்கு இதுவரை ஒதுக்கியுள்ள தொகை மொத்தம் ரூ. 12 கோடியாகும்.

மக்கள் சபையில்.....

40,000 உல்லாசப் பிரயாணிகள்

"1954-ம் ஆண்டில், 9,680 அமெரிக்கர்கள், 8,707 பாகிஸ்தானிகள், 7,919 பிரிட்டிஷ்காரர்கள், 3,095 இலங்கையர்கள், 1199 பிரெஞ்சுக்காரர்கள் ஆகியோர் உட்பட மொத்தம் சுமார் 40,000 வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் இந்தியாவுக்கு வருகை தந்தனர்; இதனால், 1952—53-ம் ஆண்டில் இந்தியாவுக்குக் கிடைத்த அந்நிய நாணயச் செலாவணியின் பெறுமானம் சுமார் 25 கோடி ரூபாய் இருக்கும்" என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகம் வேண்டாம்?

"அதிகாரபூர்வமான சீன தேசப் படத்தில், இந்தியப் பிரதேசத்தின் ஒரு பகுதி சேர்க்கப்பட்டிருப்பதைப் பற்றி, சீன சர்க்காரிடம் இந்திய சர்க்கார் தங்களுடைய ஆட்சேபணையைத் தெரிவித்திருக்கிறார்களா?" என்ற கேள்விக்கு, "முன்னரே இதுபற்றி சீன சர்க்காரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது; பழைய தேசப் படங்களையே பயன்படுத்தி வருவதாகவும், அவைகளைத் திருத்துவதற்கு அவகாசமில்லையென்றும் பதில் கிடைத்தது; இதன் காரணமாக, புதிதாக ஆட்சேபணை தெரிவிப்பது அவசியமில்லையெனக் கருதப்பட்டது; இந்திய எல்லையைப் பற்றி ஒருவித சந்தேகமுமில்லை," என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்

"தொழில் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க ஊக்கமளிக்கும்படியும், நிதி உதவிக்கான திட்டங்களைச் சமர்ப்பிக்கும்படியும் எல்லா மாநில சர்க்கார்களையும் இந்திய சர்க்கார் கேட்டுள்ளனர்; இதுவரையில், திருவாங்கூர்—கொச்சி, ஐதராபாத், சென்னை, உத்தரப் பிரதேசம், மத்திய பாரத், பம்பாய், ஒரிசா, டில்லி ஆகிய மாநிலங்களிலிருந்து திட்டங்கள் கிடைத்திருக்கின்றன; இந்த மாநிலங்களுக்கு மொத்தம் ரூ 29,11,000-க்கு மேற்பட்டு நிதி உதவி அளிக்கப்பட்டிருக்கிறது," என்று, கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாங்கின கடன் எவ்வளவு?

"உலக பாங்கியிடமிருந்து இந்தியா இதுவரை 12.67 கோடி டாலர் கடனாக வாங்கியுள்ளது," என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கள்ளக் கடத்தல்கள்

"பம்பாய் சான்டா குரூஸ் விமான நிலையத்திலுள்ள சுங்க அதிகாரிகள் 1954 டிசம்பர் 12-ந் தேதியன்று, இந்தியாவிலிருந்து வெளிநாடு செல்லவிருந்த அந்நியர் ஒருவரிடமிருந்து மொத்தம் ரூ 1,32,523 மதிப்புள்ள இந்திய ரூபாய் நோட்டுகளை கைப்பற்றினர்," என்று தெரிவிக்கப்பட்டது.

* * *

"1954-ம் ஆண்டில், முன்னாள் பிரெஞ்சு ஆதிக்கப் பிரதேசங்களிலிருந்து கள்ளக் கடத்தல் பொருட்டு மொத்தம் 4,360 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டன; அவைமூலம் கைப்பற்றப்பட்ட சரக்குகளின் மொத்த மதிப்பு சுமார் ரூ. 14,14,000 இருக்கும்," என்று கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

1954-ம் ஆண்டில் டிசம்பர் மாதத்துடன் முடிந்த ஒன்பது மாத காலத்தில், அபினி மூலம் கிடைத்த மொத்த வருமானம் சுமார் ரூ. 1,92,11,000 ஆகும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என் அண்ணாதுரை, எம்.ஏ.